**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 144/2015 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. துரை ராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 31.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு பைனான்ஸ் நடத்தி வந்தேன். விபத்தில் இறந்துபோன ஜெயின் ராஜ் எனது மகன். சம்பவம்நடந்த போது 12 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். 30.08.2014 ம் தேதி காலை 08.30 மணி அளவில் கருங்கலில் பெத்தேலேகம் பள்ளிக்கு செல்வதற்காக எனது TN 75. F. 6858 என்ற Hero Honda Splender வண்டியை எடுத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றான். நான் எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வீட்டில் இருந்தேன்.

2. 08.30 மணி அளவில் ஜெயின் ராஜ் மங்கலக்குன்றில் இருந்து கருங்கலுக்கு செல்லும் போது மாங்கன்று விளை அருகே எதிர்த்தாற்போல் ஜாண்சன் என்பவர் Hero Honda வாகனத்தில் வந்து ஜெயின்ராஜ் மீது இடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்து ஏற்பட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். காயம்பட்ட ஜெயின் ராஜை முதலில் கருங்கல்அன்னை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு பின்னர் அங்கிருந்து மேல்சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் கருங்கல் அன்னை மருத்துவமனைக்குசென்றுவிட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

3. இது சம்மந்தமாக புகார் மனு எனது வீட்டில் வைத்து எழுதிக்கொடுத்தேன். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** :

எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 144/2015 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. புஷ்பகலா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. துரைராஜ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 31.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயின் ராஜ் எனது மகன். சம்பவம் நடந்த போது 12 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். 30.08.2014 ம் தேதி காலை 08.30 மணி அளவில் கருங்கலில் பெத்தேலேகம் பள்ளிக்கு செல்வதற்காக எனது TN 75. F. 6858 என்ற Hero Honda Splender வண்டியை எடுத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றான்.

2. 08.30 மணி அளவில் ஜெயின் ராஜ் மங்கலக்குன்றில் இருந்து கருங்கலுக்கு செல்லும் போது மாங்கன்று விளை அருகே எதிர்த்தாற்போல் ஜாண்சன் என்பவர் Hero Honda வாகனத்தில் வந்து ஜெயின்ராஜ் மீது இடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்து ஏற்பட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். காயம்பட்ட ஜெயின் ராஜை முதலில் கருங்கல் அன்னை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு பின்னர் அங்கிருந்து மேல்சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனது கணவர் கருங்கல் அன்னை மருத்துவமனைக்கு சென்றுவிட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்.

**குறுக்கு விசாரணை :**

எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 144/2015 P.W. 3/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வில்சன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 31.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். அ.சா1 ஐத் தெரியும். விபத்தில் இறந்துபோன ஜெயின் ராஜ்யையும் தெரியும். 30.08.2014 ம் தேதி காலை 08.30 மணிக்கு வேலைக்குச் சென்றுவிட்டு மாங்கன்று விளையில் உள்ள இந்திரா நகர் காலணியின் அருகே டீக்குடித்துக்கொண்டிருந்தேன். ரோட்டின் அருகே தெரிந்த ஜெயின்ராஜின் வாகனமும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வாகனமும் விபத்துக்குள்ளானதாக தெரிந்து அங்கு சென்று விபத்துக்குள்ளான ஜெயின்ராஜை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

## IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 144/2015 P.W. 4/L.W. 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜு | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சந்திரன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 31.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மர வேலைச் செய்து வருகிறேன். அ.சா1 ஐத் தெரியும். விபத்தில் இறந்துபோன ஜெயின் ராஜ்யையும் தெரியும். ஆஜர் குற்றம் சுமத்தப்ப்ட்ட நபரையும் எனக்குத் தெரியும். 09.08.2014 ம் தேதி காலை 08.30 மணி அளவில் மிடாலம் ரூட்டில் படம் பார்ப்பதற்காக சென்றுக்கொண்டிருந்தேன். மங்கலகுன்றுக்கு முன்பாக ஒரு திருப்பத்தில் இறந்துபோன ஜெயின்ராஜ் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி Hero Honda இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தார். ஆஜர்குற்றம் சுமத்தப்பட்ட நபர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி Hero Honda இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தார். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கவனக்குறைவாக வலது பக்கம் ஏறி ஜெயின்ராஜ் வந்த வாகனத்தின் மீது இடித்து விபத்தை ஏற்படுத்தினார்.

2. விபத்து ஏற்பட்டு கீழே விழுந்த ஜெயின்ராஜை ஆம்புலன்ஸ் வரவழைத்து முதலில் அன்னை மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக அனுப்பி வைத்தேன். நானும் உடன் சென்றேன். அங்கிருந்து அவரை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சென்றுப்பார்த்தபோது அவர் உயிருடன் இல்லை. போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

நான் புஷ்பகலாவின் தூரத்து உறவினர் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்த இடத்திலிருந்து எனது வீடு சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. நான் சம்பவம் கேள்விபட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பார்த்தேன்.

2. நான் வீட்டிலிருந்து 07.45, 07.50 மணிக்கு கிளம்பினேன், நான் இருசக்கர வாகனத்தில் வந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இறந்துபோன ஜெயின்ராஜ் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார் என்றால் சரிதான். அது மூன்று முக்கு ரோடு என்று சொன்னால் சரிதான். மேற்படி ரோடு தெருவுக்கடையில் இருந்து நேராக உள்ளது என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார் என்றால் சரியல்ல. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார்.

3. நான் சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு வந்திருப்பேன் என்றால் 08.20 க்கு வந்திருப்பேன். நான் சம்பவத்தை எங்கிருந்து பார்த்தேன் என்றால் மூன்று முக்கு ரோட்டிற்கு முன்னர் பார்த்தேன். இறந்துபோன நபர் தான் வாகனத்தை தவறான பாதையில் வந்து இடித்துவிட்டார் என்றால் சரியல்ல. அவன் சரியாக தான் வந்தான், இவர்தான் இடித்துவிட்டார்.

4. ஆம்புலன்சை நான் பிடிக்கவில்லை, அருகிலிருந்த நபர்கள் சொல்லியிருப்பார்கள். இருவரும் சம்பவயிடத்தில் அடிபட்டுக்கிடந்தார்கள்என்றால் சரிதான். இருவரும் ஒரே ஆம்புலன்சில் சென்றார்களா என்றால் வேறு வேறு ஆம்புலன்சில் சென்றார்கள். நான் சென்ற ஆம்புலன்சில் யார் யார் வந்தார்கள் என்று தெரியாது. நேராக எங்கு சென்றோம் என்றால் கருங்கல் அன்னை மருத்துவமனை சென்றோம், அங்கிருந்து ஆசாரிபள்ளம் மருத்துவமனை சென்றோம். அங்கிருந்து நாங்கள் முத்து நியூரோ மருத்துவமனை சென்று அங்கிருந்து திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனை சென்றோம் என்றால் சரியல்ல. அங்கு தான்மேற்படி நபர் இறந்ததை உறுதிபடுத்தினார்கள் என்றால் சரியல்ல. கேரளாவில் உள்ள கிம்ஸ் மருத்துவமனையில் உறுதிபடுத்தியபிறகு தான் நாங்கள் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

5. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.